بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/05/2025 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மக்கா வெற்றியின் பின்னணியில் மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் மற்றும் மதிப்பிற்குரிய டாக்டர் ஷேக் மஹ்மூத் சாஹிப் ஷஹீது அவர்களின் நற்குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

கடந்த குத்பாவில் நான் ஒரு நபர் சலாம் கூறி இருந்தும்கூட ஒரு முஸ்லிம் அவரைக் கொன்றார் என்ற குறிப்பை எடுத்துரைத்திருந்தேன். அது தொடர்பாக சூரா அந்நிஸாவின் வசனத்தை ஓதியிருந்தேன். அதில், ‘உங்களிடத்தில் எவரேனும் சலாம் கூறினால், நீர் நம்பிக்கையாளர் இல்லை எனக் கூற வேண்டாம்’ என்று சொல்லப்பட்டிருந்தது. அதன் விவரத்தில் இருக்கும் விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதைத் தடுத்ததையும் தாண்டி, அப்படி செய்தவர் மீது மிகுந்த கோபத்தையும் வெளிப்படுத்தினார்கள். மேலும், அவரைத் தம் பார்வையிலிருந்து விலக்கியும் விட்டார்கள்.

சில அறிவிப்புகள்படி, பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு எதிராக துஆவும் செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அது பற்றி மிகுந்த வருத்தம் இருந்தது. எவ்வாறாயினும், ஹுஸூர் (ஸல்) அவர்கள் அதை மிகுந்த வெறுக்கத்தக்க குற்றமாக கருதினார்கள். அந்தோ! இன்றைய காலத்து பாக்கிஸ்தானின் பெயர்தாங்கிய முல்லாக்களும், மார்க்கத்தின் ஒப்பந்ததாரர்களும் இந்த விஷயத்தைப் புரிந்து கொண்டால், அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கு அஹ்மதிகள் மீது அநீதி இழைப்பதை நிறுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

**இப்பொழுது போர்களைப் பற்றிய குறிப்புகளின் கீழ் மக்கா வெற்றி பற்றி எடுத்துரைப்பேன்.** இது ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு ரமலான் மாதம் நிகழ்ந்தது. இதை மாபெரும் வெற்றி என்றும் கூறப்படுகிறது. இது குறித்த நற்செய்தியை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பே வழங்கியிருந்தான். இதன் விளைவாக மக்கள் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தார்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَقُلْ رَّبِّ اَدْخِلْنِىْ مُدْخَلَ صِدْقٍ وَّاَخْرِجْنِىْ مُخْرَجَ صِدْقٍ وَّاجْعَلْ لِّىْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِيْرًا

{அதாவது, மேலும் நீர் கூறுவீராக: என் இறைவா! என்னை (மீண்டும் மக்காவிற்குள்) நல்ல முறையில் நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் முறையில் (மக்காவிலிருந்து) என்னை வெளியேறச் செய்வாயாக. மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாகவும் விளங்கும் ஒருவரை நியமிப்பாயாக - திருக்குர்ஆன் 17:81}

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனம் தொடர்பாக கூறுகிறார்கள்:** இந்த வசனம் ஹிஜ்ரத்திற்கு முன்பே சூரா பனீ இஸ்ராயீலில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறங்கியது. இதில் ஹிஜ்ரத் பற்றியும், (அதற்குப்) பிறகு (நிகழவிருக்கும்) மக்கா வெற்றி பற்றியும் நற்செய்தி வழங்கப்பட்டிருந்தது.

சூரா அல்ஃபத்ஹில் மக்கா வெற்றியைப் பற்றிய நற்செய்தி இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது:

لَقَدْ رَضِىَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِىْ قُلُوْبِهِمْ فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا

(அதாவது, நம்பிக்கையாளர்கள் மரத்திற்கு அடியில் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொண்டபோது நிச்சயமாக அல்லாஹ் அவர்களைக் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைந்து, அவர்களது உள்ளங்களிலிருந்த(நம்பிக்கை)தனை அறிந்து, அவர்களுக்குச் சாந்தியை இறக்கி, அண்மையில் வரவிருக்கும் ஒரு வெற்றியினை அவர்களுக்கு வெகுமதியாக வழங்கினான் - திருக்குர்ஆன் 48:19)

உண்மை என்னவென்றால், **எந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு ஹிஜ்ரத் செய்தார்களோ அன்றே அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மக்கா வெற்றியைப் பற்றி நற்செய்தியை வழங்கி விட்டான்.** எனவேதான் ஹிஜ்ரத்தின் போது பின்வரும் இந்த வசனம் இறங்கியதாகவும் குறிப்பு கிடைக்கிறது:

اِنَّ الَّذِىْ فَرَضَ عَلَيْكَ الْقُرْاٰنَ لَرَآدُّكَ اِلٰى مَعَادٍ

{அதாவது, இந்தக் குர்ஆனின் போதனையினை உமக்கு கடமையாக்கியவன் (ஒருநாள்) உம்முடைய திரும்பும் இடத்திற்கு உம்மை நிச்சயமாக மீண்டும் கொண்டு வருவான் - திருக்குர்ஆன் 28:86}

இமாம் ஃபஃஹ்ருத்தீன் (فخرالدين) ராஸீ அவர்கள் கூறுகிறார்கள்: இந்த இடத்தில், ‘மஆத்’ அதாவது, திரும்பி வரக்கூடிய இடம் என்பதன் பொருள் மக்காவாகும்.

சூரா அல்பகராவின் ஒரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ

இந்த வசனத்தின் பொருள் இதுவாகும்: (முஸ்லிம்களே!) உங்களுக்கு ஒரேயொரு நோக்கம்தான் இருக்க வேண்டும். அதாவது, நீங்கள் கஅபா ஆலயத்தை வெற்றி கண்டு அதை இஸ்லாத்தின் தலைமையகமாக ஆக்க வேண்டும். ஏனென்றால், எப்பொழுது வரை மக்காவில் இஸ்லாம் பரவிடாதோ, எப்பொழுது வரை மக்கா முஸ்லிம்களின் கீழ் வந்துவிடாதோ அப்பொழுது வரை ஏனைய அனைத்து அரபு நாடும் முஸ்லிமாக முடியாது. இந்தத் திட்டமே முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஷஹீத் மர்ஹூம் ஒருவரைப் பற்றிய நற்குறிப்பை விளக்கமாக இவ்வாறு கூறினார்கள்:* இப்பொழுது நான் ஒரு ஷஹீதைப் பற்றி எடுத்துரைப்பேன். இந்த நற்குறிப்பு சர்கோதாவைச் சார்ந்த **மதிப்பிற்குரிய டாக்டர் ஷேக் முஹம்மத் மஹ்மூத் சாஹிப்** அவர்களுடையதாகும். இவர்கள் ஷேக் முபஷ்ஷிர் அஹ்மத் தெஹல்வீ சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்களை அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் மே 16 அன்று துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டான். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

சம்பவ நாளன்று டாக்டர் சாஹிப் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றிய பிறகு தாம் பணியாற்றி வந்த, சர்கோதாவில் உள்ள ஃபாத்திமா மருத்துவமனைக்குத் தம் குடும்பத்தினரோடு சென்றார்கள். அப்பொழுது ஏற்கனவே அங்கு Hospital Corridor -ல் ஒளிந்து கொண்டிருந்தவன் Shopping பையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்து பின்புறமாக இவர்களை சுட்டான். டாக்டர் சாஹிப் அவர்கள் உடனடியாக சிவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். ஆனால், காயங்களிலிருந்து மீள முடியாமல் ஷஹீதாகி விட்டார்கள். சம்பவத்திற்குப் பிறகு தாக்குதல் நடத்தியவன் ஆயுதத்தை அசைத்துக் காட்டியவாறு தன் கூட்டாளியுடன் அங்கிருந்து தப்பி ஓடி விட்டான். ஷஹாதத்தின் போது ஷஹீத் மர்ஹூம் அவர்களுக்கு 59 வயதாகியிருந்தது.

ஷஹீத் மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்களின் கொள்ளுப்பாட்டனார் மதிப்பிற்குரிய பாபூ இஃஜாஸ் ஹுஸைன் சாஹிப் அவர்களின் சகோதரர் சர்ஃபராஸ் ஹுஸைன் தெஹல்வீ சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். பிறகு ஷஹீத் மர்ஹூம் அவர்களின் கொள்ளுப்பாட்டனார் மதிப்பிற்குரிய பாபூ இஃஜாஸ் ஹுஸைன் சாஹிப் அவர்கள் தம் சகோதரர் மூலமாக பைஅத் செய்தார்கள்.

ஷஹீத் மர்ஹூம் லாஹூரின் FC கல்லூரியில் FSc முடித்தார்கள். பிறகு ராவல்பிண்டியில் உள்ள மருத்துவக் கல்லூரியில் 1990 -ல் MBBS முடித்தார்கள். அதற்குப் பிறகு, Punjab Service Commission -ன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். சர்வீஸ் மருத்துவமனை மற்றும் ஜின்னாஹ் மருத்துவமனையில் நான்கு ஆண்டுகள் பணி புரிந்தார்கள். 1998 -ல் Royal College of Physician UK வின் Membership -ம், 2021 -ல் Fellowship -ம் பெறும் கௌரவம் இவர்களுக்குக் கிடைத்தது.

ஷஹீத் மர்ஹூம் அவர்கள் 2001 -ல் சர்கோதாவுக்குக் குடிபெயர்ந்து சென்றார்கள். **இவர்கள் சர்கோதா மாவட்டத்தின் முதல், 'கல்லீரல் மற்றும் வயிறு சார்ந்த நோய்களின் சிறப்பு மருத்துவர்' ஆவார்கள்.** 2001 -ல் சர்கோதாவிற்கு இடம் மாறிய பிறகு, ஃபஸ்லே உமர் மருத்துவமனையிலும் முறையாக Visiting டாக்டராகத் தொண்டாற்றி வந்தார்கள். அல்லாஹ் இவர்களின் கைகளில் ஷிஃபாவை வைத்திருந்தான். இவர்களிடம் உலக அறிவு மட்டுமின்றி மார்க்க அறிவும் அதிகம் இருந்தது. திருக்குர்ஆனின் விளக்கவுரை, தஸ்கிரஹ், ரூஹானீ கஸாயின், ஜமாஅத்தின் பிற நூல்கள் மற்றும் கொள்கை முரண்பாடுகள் உள்ளடங்கிய நூல்களையும் அவர்கள் அதிகம் படித்திருந்தார்கள். ஷஹீத் மர்ஹூம் அவர்களுக்கு சர்கோதா மாவட்டத்தின் நாயிப் அமீராக தொண்டாற்றுவதற்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. மருத்துவ சங்கம் நிறுவப்பட்டதிலிருந்து அதன் உறுப்பினராக இருந்தார்கள். 2024 -லிருந்து சங்கத்தின் துணைத்தலைவராக இருந்து வந்தார்கள். இவ்வாறே சர்கோதா பிரிவின் தலைவராகவும் இருந்தார்கள்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக இவர்கள் புற்றுநோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், அப்படியிருந்தும், எப்பொழுதும் தம் நோய் மீது பிறரது நோய்க்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். எந்நேரமும் தொண்டாற்றுவதற்கு ஆயத்தமாக இருந்து வந்தார்கள். நோயாளிகளுடன் அனுதாபத்தோடும் அன்போடும் நடந்து வந்தார்கள். தேவை உடையவர்களுக்கு இலவச மருத்துவம் செய்வது இவர்களின் சிறப்பம்சமாக இருந்தது. தேவையுடைய நோயாளிகளுக்கு இலவச மருத்துவம் செய்வதோடு, அவர்கள் திரும்பிச் செல்வதற்கான பணத்தையும் கூட கொடுத்து வந்தார்கள். அவர்களுக்கான சில மருத்துவ பரிசோதனைகளை இலவசமாக செய்ய வைத்தார்கள். அதற்கான பணத்தை இவர்களே கொடுத்து விடுவார்கள். பொருளாதார ரீதியில் பின்தங்கிய பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்க முயற்சி செய்வார்கள்.

**ஷஹீத் மர்ஹூமின் தாயார் மதிப்பிற்குரிய அமத்துல் ஹய் சாஹிபா கூறுகிறார்கள்:** மர்ஹூம் அவர்கள் பெற்றோருக்கு அளவுடந்த கண்ணியம் வழங்குபவராக இருந்தார்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே எண்ணற்ற சிறப்பம்சங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். தான் உண்டு தனது

வேலை உண்டு என இருப்பார்கள். கிலாஃபத்தோடு அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார்கள். பொருளாதார விவகாரங்கள், கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றின் முழு கணக்கு வழக்குகளை வைத்திருந்தார்கள். குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் ஒருவர் மற்றவருடன் ஒன்றிணைத்து வைத்திருந்தார்கள்.

**இவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய அமத்துந்நூர் சாஹிபா கூறுகிறார்கள்:** ஜமாஅத் அமைப்போடு இணைந்திருக்குமாறு எப்பொழுதும் குழந்தைகளுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். குத்பாக்களை முறையாக கேட்பார்கள். குறிப்புகளை டைரியில் குறித்துக் கொள்வார்கள். சந்தா செலுத்துவதும் முன்னுதாரணம் கொண்டதாக இருந்தது. ஷஹாதத்தின் போது இவர்களின் வஸிய்யத் சந்தா 2025 ஆம் ஆண்டு வரை முழுவதுமாக செலுத்தப்பட்டிருந்தது.

**இவர்களின் மகள் சாயிமா சாஹிபா கூறுகிறார்கள்:** மிகவும் கருணை கொண்ட தந்தையாக இருந்தார்கள். எனது திருமணத்தின் போது எனக்குக் கூறிய ஒரே அறிவுரை, 'மகளே! உனது கணவன் வீட்டுக்குச் சென்று எப்பொழுதும் ஜமாஅத் அமைப்போடு ஒன்றிணைந்து இருக்க வேண்டும். எப்பொழுதாவது ஏதேனும் விஷயம் தொடர்பாக ஜமாஅத்திற்குத் தொண்டாற்றும் கண்ணியம் கிடைத்தால் ஒருபோதும் மறுக்கக்கூடாது' என்பதாகும்.

**இவர்களின் ஒரு மருமகள் கூறுகிறார்கள்:** அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதில் மிகுந்த அழுத்தம் கொடுத்து வந்தார்கள். எப்பொழுது ஏதேனும் ஒரு விவகாரத்தில் வழிகாட்டுமாறு விண்ணப்பித்தாலும், அவர்கள் தன் பேச்சை துஆவில் தொடங்குவார்கள்; துஆவிலேயே முடிப்பார்கள்.

**இவர்களின் சகோதரி கூறுகிறார்கள்:** ஜமாஅத்திற்கு இருக்கும் எதிர்ப்பு சூழ்நிலை காரணமாக, மிகவும் கவலை தோய்ந்திருப்பார்கள். இரவுகளில் எழுந்து நஃபில் தொழுவதும், தஹஜ்ஜுத் தொழுவதும் அன்றாட வழக்கமாக இருந்தது.

**சர்கோதாவின் மாவட்ட அமீர் சாஹிப் கூறுகிறார்கள்:** மக்களுக்குப் பயனளிக்கக் கூடியவராக இருந்தது மட்டுமின்றி, இவர்களிடம் பணிவு மற்றும் தன்னடக்கம் எனும் பண்பு சிறப்பாகக் காணப்பட்டது. ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு மிகுந்த கண்ணியம் அளித்து வந்தார்கள்.

**சர்கோதாவின் முரப்பி சாஹிப் கூறுகிறார்கள்:** நம்முடைய மிகவும் நேசத்திற்குரியவர், மனித குலத்திற்குத் தொண்டாற்றக்கூடியவர், கருணை மற்றும் பரிவின் மொத்த உருவகமாகத் திகழ்ந்தவர், லட்சக்கணக்கான மக்களின் மஸீஹாவாக விளங்கியவர், மலக்கைப் போன்ற மனிதர் நம்மை

விட்டு பிரிந்துச் சென்றுவிட்டார். ஷஹீத் மர்ஹூம் எளிமையாக வாழ்ந்த மனிதர் ஆவார்கள். வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும் முன்னுதாரணம் கொண்டதாக இருந்தது.

எதிரிகள் இவர்களுக்கு எதிராக மாவட்டம் முழுவதும் பிரசுரங்களும் வினியோகித்திருந்தார்கள். இவ்வாறே எதிரிகள், இவர்களையெல்லாம் இலக்காக வைக்க வேண்டும் எனப் பெயர்ப்பட்டியல் தயாரித்து வைத்திருந்தார்கள். அதில் டாக்டர் சாஹிப் அவர்களின் பெயர் முதல் பெயராக இருந்தது. அக்ரம் தூஃபானி என்ற ஒரு மௌலவி இவர்கள் கட்டாயம் கொல்லப்பட வேண்டியவர் என்று மார்க்கத்தீர்ப்பும் கொடுத்திருந்தார். இது மட்டுமின்றி, இந்த மார்க்கத் தீர்ப்பு விநியோகமும் செய்யப்பட்டிருந்தது. ஆனால், பிறகும் அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அல்லாஹ் விரைவில் இவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக. ஏனெனில், நாட்டைக் காப்பாற்றுவதற்கு இப்பொழுது இவர்களிடமிருந்து விடுதலை பெறுவது மிகவும் அவசியமாகும். இந்தப் பெயர்தாங்கிய மார்க்கத்தினர் மார்க்கத்தின் பெயரால் தீவிரவாதம் செய்கின்றனர். இவர்கள் நாட்டை நாசமாக்கத் துடிக்கின்றார்கள். நாம் அல்லாஹ்வின் முன்னாலேயே நம் மன்றாடல்களை வைக்கின்றோம். அவனுக்கான உரிமையை செலுத்துவதன் பக்கம் நாம் முழுமையான முறையில் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களுடைய உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும் பொறுமையையும், மனதைரியத்தையும் வழங்குவானாக.

இவர்களின் தாயார் வயது முதிர்ந்தவர் ஆவார்கள். அல்லாஹ் அவர்களுடைய கவலையை லேசாக்குவானாக. இவர்களின் மனைவி, மக்கள் அனைவரையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)